பெலிஅத்த பிரதேச சபை - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெலிஅத்த பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெலிஅத்த பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமு உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் கொள்வனவு செய்திருந்த தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 1.64 மில்லியன் தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் கொள்வனவு செய்திருந்த தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், இயந்திரங்கள் 2025 ஆண்டில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கமரா முறைமை பொருத்துதல், மின்சார மற்றும் தொலைபேசி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.8 மில்லியன் தொகை காணி கட்டிடங்கள் மீதியில் காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணி கட்டிங்கள் என காட்டப்பட்டுள்ள சொத்துக்களை சரி சொத்துத் தொகுதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(இ)	பெற வேண்டிய ரூபா 4.5 மில்லியனிற்காக ஒரே தடவையில் பெறும் பணம் கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	2025 ஆண்டு கணக்குகளில் ஒரே தடவையில் பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 4.5 மில்லியன் தொகையினை கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	நூலகத்தின் சேர்வு பதிவேட்டின் படி நூலகப் புத்தகங்களின் கிரயம் ரூபா 5,171,120 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,081,998 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 89,122 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கிரயம் மற்றும் சேர்வுப் பதிவேட்டின் படி கிரத்தினுடைய வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளில் சரி செய்யப்பட வேண்டும்.
(உ)	மிகையாக மீளளிப்பு செய்திருந்த ரூபா 92,272 இற்கான ஊழியர் சம்பளச் செலவு செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பொறுப்புக்கள் குறைவாக காட்டியது 2025 ஆண்டில் சரி செய்ய வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டிற்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 93,798 இற்காக செலவுகள் அட்டுருச் செலவுகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	அட்டுருச் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(எ)	சிட்டையிடப்பட வேண்டிய மற்றும் சிட்டையிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் முறையே ரூபா 32.92 மில்லியன் தொகை மற்றும் ரூபா 35 மில்லியனாக காணப்பட்டமையால், ஆண்டிற்கான வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 2.08 மில்லியனினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை கணக்கீடு செய்யப்பட்டமையால் மாற்றங்கள் ஏற்பட்டது என.	மிகையாக காட்டப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஏ)	சிட்டையிடப்பட வேண்டிய மற்றும் சிட்டையிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பண வருமானம் முறையே ரூபா 3,222,381 தொகை மற்றும் ரூபா 3,023,972 தொகையாக காணப்பட்டமையால், ஆண்டிற்கான வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 198,409 தொகையினால குறைவாக காட்டப்பட்டிருந்தது.	ஆண்டின் போது கிடைத்திருந்த அட்டவணைகள் மாத்திரம் கவனத்தை செலுத்தி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என.	குறைவாக காட்டப்பட்டிருந்த நீதிமன்றத் தண்டப்பட வருமானம் சரயாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஒ)	கூட்டுப்பெறுமதி ரூபா 5.34 மில்லியனிற்கான இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் ஏனைய நிர்மாண வேலைகள் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.2 கணகக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
கூட்டுப்பெறுமதி ரூபா 13,397,535 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக விரிவான அட்டவணை மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் திருப்திகரமான பரிசோதனைகள் மேற்கொள்ள முடியவில்லை.	2025 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய விரிவான அட்டவணைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)	சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேங்கள் என கால ரீதியான இனங்கண்டு வீதவரியை திருத்திக் கொள்ள முடியும் எனினும், அவ்வாறு செயற்படாமல், 1991 இன் இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்தும் மாத்திரம் மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது.	05 கிராம சேவகர் பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என.	சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571	02 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 287,073 தொகைக்கான 47 பலவின வைப்பு மீதிகளை ஆதனவழிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்பு மீதிகள் தீர்க்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 27.16 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 22.89 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	5,439,400	4,955,031	5,093,685	2,580,160	5,200,700	5,086,094	5,008,395	2,718,814
வாடகை	7,952,950	10,615,060	11,567,215	2,440,336	13,115,800	9,770,509	8,397,745	3,392,491
அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,995,550	2,546,988	2,832,138	17,600	1,911,200	2,104,745	1,805,115	302,750
ஏனைய வருமானங்கள்	16,673,205	14,732,883	15,181,493	356,292	10,648,200	16,525,935	21,185,022	804,902
மொத்தம்	**32,061,105**	**32,849,962**	**34,674,531**	**5,394,388**	**30,875,900**	**33,487,283**	**36,396,277**	**7,218,957**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1157 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 2.43 மில்லியன் தொகை பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	பௌதீக ரீதியாக இனங்காண முடியாத ஆதனங்கள் காணப்படுகின்றது எனவும் மற்றும் மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ)	பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் வீதவரியொன்று சபையினால் விதிக்கப்பட்ட காலப் பகுதியில் செலுத்தப்படாவிடின் நிலுவை வரித் தொகையை அறவீடு செய்வதற்காக செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் மூலம் சபையின் உத்தியோகத்தர் ஒருவருக்கு அதிகாரமளிக்கப்பட்டு அந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், நிலுவை மீதி ரூபா 5,000 தொகைக்கு மிகையான 108 ஆதன உரிமையாளர்களிடம் பெற வேண்டிய வீதவரி ரூபா 1.03 மில்லியன் தொகை அறவீடு செய்திருக்கவில்லை.	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சிவப்பு அறிவித்தல் வழங்கலுக்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றது என.	கூடிய பெறுமதிகளையுடைய நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாண) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 04 இன் படி கடையறைகள் வாடகைக்கு கொடுக்கும் போது ஒரே தடவையில் பெறும் பணத்தை ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கும் அல்லது வாடகைக்கு பெறுவோரின் வேண்டுகோளின் பேரில் 06 மாதங்களுக்குள் அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும், புதிய வர்த்தக தொடர் கட்டிடம் மற்றும் அலுவலக நூலக சிகிச்சைக் கட்டிடத்தின் முறையே 16 கடையறைகளில் இருந்து மற்றும் 03 இல் இருந்து கூட்டுத்தொகை ரூபா 4.78 மில்லியன் தொகைக்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்திருக்கவில்லை.	ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 1.47 மில்லியன் தொகை அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்களிடம் சிக்கல் தொடர்பாக அறிவுரை வேண்டப்பட்டுள்ளது என.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	பெலிஅத்த புதிய அலுவலகத்தின் இரண்டாவது மாடியில் 2,860 சதுரஅடி தரைப் பகுதியொன்று நெசனல சிசுர புலமைப் பரிசில் மன்றம் நடாத்திச் செல்வதற்காக வாடகைக்கு கொடுக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 திகதி சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாண) 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 5.08 மில்லியன் தொகைக்கான வாடகை,	அணுகியிருந்த உடன்படிக்கையின் படி சட்டச் செயற்பாடுகளுக்காக அணுகுகின்ற இயலுமை காணப்படவில்லை எனவும், மேலதிக அறிவுரைக்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 5.08 மில்லியன் தொகைக்கான வாடகை, ரூபா 3.4 மில்லியனிற்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

ரூபா 3.4 மில்லியனிற்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் போது வர்த்தக அனுமதிப்பத்திரம் வழுங்கப்பட்டிருந்த 25 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் மற்றும் 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலத்தை மிகைத்திருந்த 30 கைத்தொழில் அலகுகள் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காமையால், சபைக்குக் கிடைக்க வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 272,250 இற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை சபை இழந்திருந்துடன், அவற்றை அறவீடு செய்தல் தொடர்பாக சபையின் முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	55 கைத்தொழில்களில் 34 இற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது எனவும், மீதியான 21 இற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும்.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிப்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	பெலிஅத்த பிரதேச சபையினால் தங்காலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 03 வழக்குகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 519,632 இற்கான மீதி 05 வருடங்களை மிகைத்திருந்த போதிலும், இதுவரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஒரு வழக்கின் எதிராளி இறந்துள்ளார் எனவும், ஏனைய வழக்குகள் தொடர்பாக அறுதியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது என.	வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 706,002 தொகை பெறுமதியான பழைய தகனசாலைக் கட்டிடம் திருத்த வேலை மேற்கொள்ளாமையால், 2009 ஆண்டு முதல் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.	எதிர் காலத்தில் திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என.	கட்டிடத்தை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	பிரதேச சபையினால் அனுபவித்து வருகின்ற கூட்டுப் பெறுமதி ரூபா 24.29 மில்லியன் மற்றும் 07 ஏக்கர் 05 ரூட் 29.38 பர்சஸ் அளவான 22 காணித் துண்டுகளின் சட்டரீதியான உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணிகளை உரித்தாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என.	சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான 01 ரூட் 3.5 பர்சஸ் அளவான நிஹிலுவ அம்பகஹகொரடுவ மயானக் காணியில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொண்டிருந்த போதிலும், அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வழக்கு அலுவல்களுக்காக அனைத்து ஆவனங்களும் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என.	அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	சபைக்குச் சொந்தமான கூட்டுப் பெறுமதி ரூபா 3.07 மில்லியன் தொகை மற்றும் 07 ரூட் 157.97 பர்சஸ் அளவான 08 காணிகளை ஆக்கபூர்வமான அலுவல்களுக்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது.	ஆக்கபூர்வமான அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	சபைக்குச் சொந்தமான காணியை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும்.
(உ)	2014 மற்றும் 2016 ஆண்டுகள் முதல் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 02 வாகனங்கள் திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2013 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை கப் வண்டியின் திருத்த வேலைகளுக்காக ரூபா 523,800 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், தற்போது பயன்படுத்தப்படாமல் தகனசாலை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது.	02 வாகனங்களின் அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அடுத்த வாகனம் விதிக்கப்பட்ட செய்முறையின் படி எதிர் காலத்தில் திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என.	வாகனத்தை அப்புறப்படுத்த அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையில் 04 பதவிகளுக்குரிய 20 மிகைகளை முறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகை உத்தியோத்தர்களை பதவியணியில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	சபையின் பதவியணித் தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டின் பாதீட்டில் அடங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 3.15 மில்லியன் தொகையுடைய 07 அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், பாதீடு செய்யப்படாத கூட்டுப்பெறுமதி ரூபா 3.94 மில்லியனிற்கான 04 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை.	நியாயப்படுத்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.	இலக்காகிய அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் அவற்றை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 சுற்றாடச் சிக்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
திண்மக் கழிவுப் பொருள் நிலையத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்த முடியாத எனினும், மீள்சுழற்சி செய்யக்கூடிய ஏனைய திண்மக் கழிவுப் பொருட்களை வேறாக்கி மீள்சுழற்சிக்காக எடுத்துச் செல்லும் வரை முறையான பாதுகாப்பு செய்முறையொன்றின் படி களஞ்சியப்படுத்தியிருக்கவில்லை.	திண்மக் கழிவுப் பொருள் வெவ்வேறாக களஞ்சியப்படுத்தக்கூடியவாறு களஞ்சிய வசதிகள் தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களை முறைப் பிரகாரம் மற்றும் பாதுகாப்பு செய்முறையொன்றுடன் களஞ்சியப்படுத்த வேண்டும்.